ALPHA MIND POWER

# NEWSLETTER



December 2016

## From Guruji's desk....



My dear Alpha Siddha,

I am sure this letter finds you in good health and good cheer.

In our level 1 class you learn how to go to the Alpha level. That is the base of our workshop. That is the essence of the concept of Alpha Mind Power. The process of reaching this level of brain wave frequency is made clear and easy and experienced in the class as well.

All the techniques that you learn work only at the Alpha level. Alpha is a state when the subconscious mind is open and we are in tune with the Universe. Visualising our goals at that level helps us to register them in our subconscious mind and also takes them to the Universe as a request to manifest them.

'Everything is possible at Alpha'. What does this mean? When you visualise at Alpha you improve the energy of the goal. You improve the possibility of the goal manifestation. This is discussed in level 2. With belief and constant practice our Siddhas have manifested innumerable goals. In the process they also start enjoying the Alpha level by itself. And, THAT is the purpose!

In the higher levels an Alpha Siddha experiences even more powerful meditations and higher levels of consciousness where manifestation of goals becomes just a routine. When this is the experience of thousands of Alpha Siddhas, a few weeks back I was quite concerned to read an email from one Siddha.

She asked "Guruji, You told us everything is possible with Alpha. Can I visualise that I am passing MBA without doing B.Com.? Will it happen?" I could only feel compassion and concern for her as she had missed the essence of the class happen?" Was it innocence or arrogance?

totally. After a few days she again wrote to me "I had my B.Com. exam today. I have not written anything as I did not study. Now, if I visualise that I am passing, will it

At Alpha, we request the Universe to work on our behalf to manifest our goals. We DO NOT challenge the Universe. The more you practice Alpha and see your goals manifesting you only feel more humble.

Remember, when the mind is at the Alpha level, we can manifest our goals. But, if the mind is only on goals, we cannot even reach Alpha. Our ancient Siddhas could manifest nything only with their mind power. And how did they achieve this mind power? Only through meditation.

The base is the Alpha level. First master the technique of reaching this level with ease. In our system it is made easy with the audio track. Use it when you meditate and you will find it very easy to reach the Alpha state. Then visualise your goals. That is the smart way to achieve what you want.

Challenging the Universe does not take you anywhere. It only creates what I call Spiritual Ego. And, believe me, once this happens, spiritual growth stops. Practice Alpha meditation with sincerity and manifest all your goals. But, never let this go to your head. As I always insist, your growth should be both spiritual and materialistic. With Alpha Mind Power, this is achieved very easily.

Start enjoying the meditation. Connect with Guru, God and Siddhas sincerely. You will find more clarity about your goals. you will also see them manifesting more effortlessly.

Wishing you blissful meditations and wonderful manifestations,

Blessings,

***Srimatha***

### *Rishikesh Yatra With Guruji*

***19.04.2017 to 01.05.2017***

**Program A** (3days) : Vashista gufa, Haridwar & Ganga Pooja/Aarthi

**Program B** (2 days) : Babaji Cave

**Program C** (5 days) : **"Shantagni"** – Reprogram your mind- Residential Retreat at Ashram

(10 days + 2 days travel + 1 day rest = Total 13 days)
You can attend all the programs or any combination.

**Eligibility**

**For Program A & B** : Level -1
**For Program C** : Level-3

For further enquiries please contact AMP office:
+919841272146

### குருஜியுடன் ரிஷிகேஷ் யாத்திரை

**19.04.2017 முதல் 01.05.2017**

**நிகழ்ச்சி A** : (3 நாட்கள்) : வசிஷ்டர் குகை, ஹரித்துவார், கங்கா பூஜை/ஆர்த்தி

**நிகழ்ச்சி B** : (2 நாட்கள்) : பாபாஜி குகை

**நிகழ்ச்சி C** : (5 நாட்கள்) : **"சாந்தக்னி"** – மனதை தூய்மைபடுத்து – ஆசிரமத்தில் நடக்கும் வகுப்பு

(10 நாட்கள் +2 நாட்கள் பயணம்+ 1 நாள் ஓய்வு = மொத்தம் 13 நாட்கள்)

3 நிகழ்ச்சிகள் அல்லது ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளலாம்

**தகுதி**

**நிகழ்ச்சி A & B** : கட்டம் 1
**நிகழ்ச்சி C** : கட்டம் 3

விபரங்களுக்கு AMP அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்
+919841272146

என் அருமை ஆல்ஃபா சித்தரே,

இந்த கடிதம் உங்களை நல்ல ஆரோக்கியமும் மனநிலையும் கொண்ட நிலையில் காணும் என்று நம்புகிறேன்.

நமது ஆல்ஃபா முதல் நிலை வகுப்பில் ஆல்ஃபா நிலைக்கு போவது எப்படி என்பதை தெரிந்து கொள்கிறீர்கள். அதுதான் நமது வகுப்பின் அடிப்படை. ஆல்ஃபா மைண்ட் பவர் என்பதன் சாராம்சம் அது தான். இந்த நிலையை அடைவது எப்படி என்பது வகுப்பில் தெளிவாக புரிவதுடன் அனுபவ பூர்வமாக உணரவும் செய்கிறீர்கள்.

நீங்கள் கற்றுக் கொள்ளும் வழிமுறைகள் அத்தனையும் அந்த நிலையில் தான் செயல்படும். ஆல்ஃபா நிலையில் என்பது நமது ஆழ்மனம் திறந்திருக்கும் நிலை. பிரபஞ்சத்துடன் நாம் இணைந்திருக்கும் நிலை. அந்நிலையில் நமது இலட்சியங்களை காணும் பொழுது அவை நமது ஆழ்மனதில் பதிந்து அவற்றை நிறைவேற்றும்படி பிரபஞ்சத்திற்கு ஒரு விண்ணப்பமாக சென்றடைகின்றன.

ஆல்ஃபா நிலையில் எல்லாமே சாத்தியம். இதற்கு என்ன அர்த்தம் ஆல்ஃபா நிலையில் காணும் பொழுது இலட்சியத்தின் சக்தியை அதிகரிக்கிறீர்கள். அது நிறைவேறும் சாத்தியக்கூறை அதிகப் படுத்துகிறீர்கள். இது இரண்டாவது கட்டத்தில் விளக்கப் படுகிறது. நம்பிக்கையுடன் பயிற்சி செய்து நமது ஆல்ஃபா சித்தர்கள் எண்ணிலடங்கா இலட்சியங்கள் நிறைவேறுவதை கண்டு வருகிறார்கள். நாளடைவில் ஆல்ஃபா நிலையில் லயித்து ஆனந்தம் என்பதை உணரத் துவங்குகிறார்கள். உண்மையில் அது தான் நமது குறிக்கோள்.

உயர் வகுப்புகளில் ஆல்ஃபா சித்தர்கள் மிகவும் சக்தி வாய்ந்த தியானங்களையும் மிக உயர்வான நிலையையும் உணருகிறார்கள். இலட்சியங்கள் நிறைவேறுவது என்பது அன்றாட செயலாகி விடுகிறது. பல ஆயிரக்காண சித்தர்களின் அனுபவம் இப்படி இருக்கும் பொழுது சில வாரங்களுக்கு முன் எனக்கு வந்த ஒரு இமெயில் என்னை சிந்திக்கவும் கவலை கொள்ளவும் வைத்தது.

அந்த பெண் சித்தரின் கேள்வி குருஜி ஆல்ஃபா மூலம் எல்லாமே சாத்தியம் என்று சொன்னீர்கள். நான் பிகாம் முடிக்காமலேயே எம்பிஏ முடித்தது போல் காணலாமா அது நிறைவேறுமா அவரை நினைத்து என் மனதில் பரிதாபமும் கவலையும் தான் தோன்றின. வகுப்பின் அடிப்படையை அவர் தவற விட்டு விட்டாரே சில நாட்கள் கழித்து மீண்டும் எனக்கு எழுதினார். இன்று எனக்கு பிகாம் பரீட்சை இருந்தது. நான் படிக்காததால் எதுவுமே எழுதவில்லை. இப்பொழுது நான் பாஸ் ஆகிவிட்டது போல் பார்த்தால் அது நடக்குமா இது அறியாமையா அல்லது அகங்காரமா.

ஆல்ஃபா நிலையில் பிரபஞ்சத்தையே நமக்காக செயல்பட்டு நமது இலட்சியத்தை நிறைவேற்றி தரும்படி கேட்டுக் கொள்கிறோம். பிரபஞ்சத்துக்கு நாம் சவால் விடுவதில்லை. ஆல்ஃபா தியானம் தொடர்ந்து பழகி பல இலட்சியங்கள் நிறைவேறுவதை காணும் பொழுது மனதில் நெகிழ்ச்சி தான் தோன்றும்.

நினைவில் கொள்ளுங்கள். மனம் ஆல்ஃபா நிலையில் இருக்கும் பொழுது நம்மால் பல இலட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும். ஆனால் மனம் இலட்சியங்களை மட்டுமே எண்ணிக் கொண்டிருந்தால் ஆல்ஃபா நிலையை கூட நாம் அடைய முடியாது. நமது பழம்பெரும் சித்தர்களால் தங்களது மனதின் சக்தியால் மட்டுமே எதையும் சாதிக்க முடிந்தது. இந்த சக்தியை அவரிகளால் எப்படி அடைய முடிந்தது தியானத்தின் மூலம் மட்டும் தான்.

ஆல்ஃபா நிலை என்பது அடிப்படை. இந்த நிலையை சுலபமாக அடையும் யுக்தியை முதலில் முழுமையாக பழகுங்கள். நமது பயிற்சியில் ஆடியோ மூலம் இது மிகவும் சுலபமாகவே முடிகிறது. தியானம் செய்யும் பொழுது அதை பயன்படுத்திக் கொள்ளுங்கள். மிக சுலபமாக ஆல்ஃபா நிலையை அடைவீர்கள். அதன் பிறகு உங்கள் இலட்சியங்களை காணுங்கள். அதுதான் உங்களுக்கு வேண்டியதை அடைய சாமர்த்தியமான வழி.

பிரபஞ்சத்திற்கு சவால் விடுவது எந்த விதத்திலும் உதவாது. அது ஆன்மீகத்தில் ஒரு ஆணவத்தை மட்டுமே உருவாக்கும். சொல்லப்போனால் இப்படி நடந்தால் அத்துடன் ஆன்மீக வளர்ச்சியே தடைபட்டு போய்விடும். ஆல்ஃபா தியானத்தை உண்மையாக பயிற்சி செய்யுங்கள். உங்கள் இலட்சியங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொள்ளுங்கள். ஆனால் இதனால் மனதில் ஆணவத்திற்கு மட்டும் இடம் கொடுத்து விடாதீர்கள். நான் எப்பொழுதும் சொல்வது போல் உங்கள் வளரச்சி இரண்டு விதத்திலும் இருக்க வேண்டும் ஆன்மீகம் மற்றும் பொருள் சார்ந்த இலட்சியங்கள். ஆல்ஃபா மைண்ட் மூலம் இது மிகவும் சுலபம் தான்.

தியானத்தை லயித்து அனுபவியுங்கள். குரு, கடவுள் மற்றும் சித்தர்களுடன் உண்மையான மனதுடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் இலட்சியங்களில் அதிக தெளிவை காண்பீர்கள். சிரமம் இன்றி அவை நிறைவேறுவதையும் காண்பீர்கள்.

உங்கள் தியானங்கள் ஆனந்தமயமாக இருக்கட்டும். உங்கள் இலட்சியங்கள் அத்தனையும் நிறைவேறட்டும்.

ஆசீர்வாதங்கள்,

ஸ்ரீமாதா

Guruji at Navakshri Homam Pooja at AMP office,





நான் கட்டம் 2 வரை முடித்துள்ளேன். ஒரு முக்கியமான இலட்சியத்திற்காக தியானம் செய்து வந்தேன். சிறிது முன்னேற்றம் இருந்தாலும் இலட்சியம் நிறைவேறாமலேயே இருந்தது. காலம் கடந்து கொண்டிருந்தது. குருஜியிடம் ஆலோசனை கேட்டு இமெயில் அனுப்பினேன். கட்டம் 2ல் செய்வது போல் இலட்சியத்தில் உள்ள தீயசக்திகளை களைந்தேன். அதை செய்தேன். ஆச்சரியப்படும்படி இலட்சியம் நிறைவேறி விட்டது. அது நடந்த விதம் உண்மையிலேயே ஆச்சரியப்படும்படி இருந்தது. நம் வாழ்க்கையில் நமக்கு தேவையானதை நிறைவேற்றிக் கொள்ள இவ்வளவு எளிய வழிமுறைகளை நமக்கு கற்றுத் தந்த குருஜிக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். **ரகுராம், சென்னை.**




I have done upto level 2. I was working on a very important official goal. Though I could see some progress the goal was not manifesting and time was running out. Then I sent an email to Guruji asking for guidance. Guruji guided me to remove negative energies from the goal as we do in level 2. I did that and like a miracle the goal just happened. Sincerely, I was totally amazed at the way in which it happened.Thanks to Guruji for showing us such simple ways to create what we want in life**.**

**Raghuram, Chennai.**

AMP எல்லா வகுப்புகளையும் முடித்திருந்தாலும் எனது தியான பயிற்சி அவ்வளவு சிறப்பாக இல்லை. எங்கள் வீட்டில் ஏதோ சரியில்லை என்பதும் எனக்குப் புரிந்தது. ஒவ்வொருவருக்கும் ஏதேனும் உடல் நலக் கோளாறு அடுத்தடுத்து வந்தது. நிறைய சண்டைகளும் இருந்தன. மாதாந்திர கூட்டத்தில் குருஜியை சந்தித்த போது எனது பிரச்சினையை சொன்னேன். சைகிக் எனர்ஜி வகுப்பில் சொல்லியது போல எலுமிச்சையை உபயோகித்து வீட்டில் உள்ள தீய சக்திகளை களையும்படி அறிவுறுத்தினார்கள். நான் மறந்து விட்டிருந்தேன். ஆனால் இப்பொழுது அதை 5 நாட்களாக செய்து வந்த பின் எனது வீட்டில் பெரிய மாற்றத்தை காண்கிறேன். அனைவரும் அதை உணருகிறோம். குருஜிக்கு நன்றி ஆல்ஃபாவுக்கு நன்றி

**தீபா, சென்னை**

Although I have attended all the classes of AMP, my practice was irregular. I could understand that something was not alright in my house as one by one we were falling sick. There were too many quarrels as well. I met Guruji in the monthly meeting and told my problem. Guruji asked me to remove the negative energies of the house using the lemon technique taught in Psychic Energy class. I had totally forgotten it. But now, after doing it for 5 days, I am seeing a tremendous change in my house. In fact, everyone is feeling that things are better now. Thanks Guruji!Thanks Alpha! **Deepa, Chennai.**

சில மாதங்களுக்கு முன் எனது கிராமத்துக்கு சென்றிருந்தேன். கிட்டத்தட்ட 5 வருடங்கள் கழித்து அங்கு சென்றிருந்தேன். நான் மிகவும் நன்றாக இருப்பதாகவும் எனது முகத்தில் ஒரு ஒளி இருப்பதாகவும் பலர் சொன்னார்கள். ஒரு கோவிலில் மிக வயதான ஒரு சித்தரை சந்தித்தேன். அவர் உடனே நான் எந்த தியானம் பழகுகிறேன் என்று கேட்டார். நான் ஆல்ஃபா பற்றி கூறினேன். எனது குண்டலினி எழுப்ப பட்டிருக்கிறதா என்று கேட்டார். நான் ஆம் என்று கூறியதும் மிகவும் மகிழ்ந்தார். எனது சக்தியின் அளவு மிக அதிகமாக இருப்பதாகவும் கூறினார். நமது குண்டலினி தியானம் பழகுவது மிகுந்த சக்தியை நமக்கு தருகிறது என்பது புரிந்தது. குருஜிக்குஎனது வணக்கம்.

**கங்காதீஸ்வரன், திருச்சி**

A few months back I visited my native village. I was going there after about 5 years. Many people commented that I was looking very good and glowing. I met a very old siddhar in a temple there. He immediately asked me what meditation I was practising. I told him about Alpha. He again asked whether my kundalini was activated. When I answered yes, he was very happy. He said my energy level was very high. Our Siddha Kundalini class is so powerful that practising it really increases our energy level. Pranams Guruji! **Gangadeeswaran, Trichy.**

சில நாட்களுக்கு முன் எவ்வளவு முயன்றாலும் என்னால் தியானம் செய்ய முடியவில்லை. பிறகு மந்திர சக்தி வகுப்பில் குருஜி கொடுத்த ஒரு மந்திரம் நினைவுக்கு வந்தது. நமது ஸஹஸ்ராரா சக்ராவை அடைத்து தியானம் செய்ய விடாமல் தடுக்கும் தீய சக்திகளை உடைத்து விடும் மந்திரம் அது. அதை 108 முறை சொன்னேன். இரண்டு நிமிடம் கூடஆகவில்லை. உடனேயே ஆழ்ந்த தியான நிலைக்கு சென்று விட்டேன். இப்பொழுது என்னால் தொடர்ந்து தியானம் செய்ய முடிகிறது. இந்த புதிய யுகத்தில் நமக்கு சுலபமான வழிமுறைகளை சொல்லிக் கொடுக்கும் மிக சிறந்த குருகிடைத்திருக்கிறார். நன்றி ஆல்ஃபா. **விஸ்வேஸ்வரன், கோவை**

A few days back I found that I was not able to meditate at all inspite of all my efforts. Then I remembered the mantra given by Guruji in Mantra Shakthi class to open the Sahasrara chakra and break any negativity that stops our meditation. I chanted it 108 times. It took me less than 2 minutes. Immediately after that I was in deep meditation. Now, I am able to meditate regularly. In these modern times we have the best Guru to give us easy solutions. Thanks Alpha!

**Visweswaran, Coimbatore.**

நான் தவறாமல் தியானம் பழகும் உண்மையான ஆல்ஃபா சித்தர். இருந்தாலும் இன்னும் சிறந்த தெய்வீக அனுபவம் வேண்டும் என்ற ஏக்கம் என் மனதில் இருந்து கொண்டே இருந்தது. கடைசியில் அது ஸ்ரீவித்யா வகுப்பில் தான் நிறைவேறியது. அந்த வகுப்பிலேயே தேவியை தரிசிக்கவும் முடிந்தது ஆசீர்வாதங்களை பெறவும் முடிந்தது. இன்று நான் மிகுந்த சந்தோஷத்துடன் ஸ்ரீவித்யா தியானத்தை தினமும் பழகி தேவியின் அருளை பெற்று வருகிறேன். என் வாழ்வில் நடந்த மிக நல்ல விஷயம் ஸ்ரீவித்யா தான். நன்றி குருஜி.

**தாரா சென்னை**

I am a sincere Alpha Siddha practising regularly. However, I always wanted a more divine experience in meditation. Finally, this happened only with Sri Vidya class. In that class itself I could see the deity clearly and felt her blessings. Today I am the happiest person enjoying Sri Vidya meditation every day and getting Devi's blessings. Sri Vidya is the best thing that happened to me in my life. Thanks Guruji!

**Thara, Chennai**

*Guruji's TV programs are telecast in these channels. Don't miss them!*

| MAKKAL TV | POTHIGAI TV |
|---|---|
| Saturdays, 9:00 AM | Mondays, 1:30 PM |

***Recordings of the programs can be viewed on our website www.alphamindpower.net***

***AMP is on Facebook & WhatsApp! Connect with us to receive latest updates on upcoming events, useful articles, & share alpha experiences with fellow alpha siddhas. Not connected yet? Send us an whatsapp message on +917358595493 to get connected***

AMP பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் குரூப்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இதன் மூலம் சுலபமாக நாம் தொடர்பு கொள்ளவும் முக்கியமான செய்திகளை பகிரவும் முடியும். நீங்கள் ஏதேனும் குரூப்பில் இல்லாவிட்டால், உங்கள் மொபைல் நம்பரிலிருந்து +917358595493 என்ற நம்பருக்கு ஒரு வாட்ஸ்அப் செய்தி அனுப்பினால் நீங்கள் வாட்ஸ்அப் குரூப்பில் இணைக்கப்படுவீர்கள்

**Face book link:** https://www.facebook.com/groups/alphamindpower/

## Upcoming classes' schedule

NOTE: Please call & register with AMP office before attending any of the workshops

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Bangalore (English) | Level – 2<br>Level – 3<br>Mantra Shakthi<br>Level – 1 | 01/12/16<br>02/12/16<br>03/12/16<br>04/12/16 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Akshaya Aura, 6, Kalidasa Marg, Gandhi Nagar, Bangalore |
| Goa (English) | Level – 2<br>Level – 3<br>Srividya<br>Level – 1 | 08/12/16<br>09/12/16<br>10/12/16<br>11/12/16 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Mandovi, D.B.Marg, Panaji, Goa |
| Chennai (Tamil) | Level – 2<br>Level – 3<br>Siddha Kundalini<br>Psychic Energy<br>Level – 1 | 14/12/16<br>15/12/16<br>16/12/16<br>17/12/16<br>18/12/16 | Wed<br>Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Trichy (Tamil) | Level – 2<br>Level – 3<br>Mantra Shakthi<br>Level – 1 | 05/01/17<br>06/01/17<br>07/01/17<br>08/01/17 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Breeze Residency, Mcdonalds Road, Trichy |
| Chennai (Tamil) | Level – 2<br>Level – 3<br>Agnikundam<br>Level – 1 | 19/01/17<br>20/01/17<br>21/01/17<br>22/01/17 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Coimbatore (Tamil) | Level – 2<br>Level – 3<br>Mantra Shakthi<br>Level – 1 | 26/01/17<br>27/01/17<br>28/01/17<br>29/01/17 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Grand Regent, 708, Avinashi Rd, Coimbatore |

*Printed & Published for*

AMP ALPHA MIND POWER™
"Power of the Subconscious Mind"

***Dr. Vijayalakshmi Panthaiyan***
***ALPHA MIND POWER***
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai - 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841696664*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*

***PRINTED MATERIAL***